Registered as a Newspaper

88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லை நாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு நாக நாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 19 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 21 (03-03-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்.90

# வவுனியாவில் நிலக்கண்ணிவெடி

## இராணுவத்தினர் 10 பேர் பலியானதாக மக்கள் விடுதலைப் படை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

வவுனியா, பம்பைமடுவில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் இராணுவத்தினரும், பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:- வவுனியா — மன்னார் வீதியை அண்டிய பகுதிகளில் தேடுதல் நடத்துவதற்காக இராணுவத்தினர் நேற்றுக் காலை சென்றனர்.

கவச வாகனங்களிலும் ஜீப் வண்டிகளிலும் சென்ற படையினர் நெலுக்குளம் என்ற இடத்தில் வைத்து டிராக்டர் ஒன்றை மறித்தனர்.

டிராக்டர்சாரதி, உதவியாளருடன், இராணுவத்தினர் பலரும் டிராக்டரில் ஏறினர். மிகுதிப் பேர் ஜீப் ஒன்று பின் தொடர நடை பவனியாகச் சென்றனர்.

டிராக்டரும் ஜீப்பும் பூவரசங்குளம் நோக்கிய பாதையில் சென்று கொண்டிருந்த வேளை, பம்பைமடுவுக்குச் சற்றுத் தொலைவில் நிலக் கண்ணி ஒன்று வெடித்தது.

கண்ணிவெடியில் அகப்பட்ட டிராக்டர் தூக்கி எறியப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அதில் பயணம் செய்த இராணுவத்தினர் பலர் மரணமானதாகவும் நடைபவனியாகச் சென்ற இராணுவத்தினர் பலர் காயம் அடைந்ததாகவும் அறியப்படுகிறது. டிராக்டர் சாரதியும் உதவியாளரும் மரணமானார்கள்.

காயம் அடைந்தவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ ராஜீவ் ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 2

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பகத்தின் பேச்சுத் தொடர்பாக இலங்கை சமர்ப்பித்த ஆட்சேபக் கடிதம் குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமது உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பதில் வெளிவிவகார அமைச்சர் திரு டிரோன் பெர்ணண்டோ கொழும்பில் உள்ள இந்திய உதவித் தூதுவரிடம் இந்த ஆட்சேபனைக் கடிதத்தை கையளித்திருந்தார்.

குண்டுச் சத்தம் பல மைல் கேட்டது

# கோப்பாய் தாம்போதி தகர்ப்பு!

## திருத்தவேலையைதடுக்க ஹெலிக்கொப்டரிலிருந்து சூடு

— உதயன் கைதடி செய்தியாளர்: சாமி —

கைதடி, மார்ச் 3

கோப்பாய்க்கும் கைதடிக்கும் இடையில் உள்ள தாம்போதி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

சனிக்கிழமை இரவு 1.30 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

தாம்போதியைத் தகர்ப்பதற்கு அதி சக்தி வாய்ந்த குண்டு பயன்படுத்தப்பட்டது.

குண்டு வெடிப்புச் சத்தம் பல மைல் தூரம் கேட்டது. சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 6 மைல் தூரத்தில் இருந்த விடுகள் கூட குண்டு வெடிப்பின் போது அதிர்ந்தன.

இச் சம்பவத்தை அடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் விருப்பத்துக்கு நியாயத் தீர்வு

## இந்திய நிலை இதுதான்; இலங்கை அரசிடம் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 2

தமிழ் மக்களின் நியாயமான விருப்பங்களுக்கு ஏற்ப இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை விரைவில் இலங்கை அரசு காண வேண்டும்.

இதுதான் இந்தியாவின் விருப்பமும் நிலைப்பாடும்.

இலங்கைப் பதில் வெளிநாட்டமைச்சர் திரு. டிரோன் பெர்ணண்டோவிடம் இந்தியத் துணைஹைகமிஷனர் திரு. கே என்.சின்ஹா இத்தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் பகத்தின் பேச்சுக்கு இலங்கை அரசின் ஆட்சேபத்தைத் தெரிவிக்குமுகமாக இந்தியத் துணை ஹைகமிஷனர் திரு. சின்ஹா இலங்கை வெளிநாட்டமைச்சுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அச்சமயமே திரு. சின்ஹா இக்கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் பகத் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சு நியாயமானது; நல்ல நோக்கத்துடன் வெளியிடப்பட்டது. இலங்கை அரசின் மறுப்பு மிகைப்படுத்தப்பட்டது. — இப்படி திரு. சின்ஹா இலங்கைப் பதில் வெளிநாட்டமைச்சரிடம் தெரிவித்தார் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.



நஞ்சை ஓசியிலை குடுத்தாலும் வாங்கிச் சாப்பிடுற மனப்போக்கு இந்த அரிசி விஷயத்திலை தெரிஞ்சு போச்சுதே...!

இப்பிடி இருக்கிற வரைக்கும் எங்களுக்குச் சுதந்திரம் கிடைக்குமோ பின்னை......!

# கரை ஒதுங்கிய பர்மிய மீனவர்கள்

## அரச அதிபரிடம் ஒப்படைப்பு

பருத்தித்துறை, மார்ச் 3

தாளையடி முனைகடலில் கரை ஒதுங்கிய 4 பர்மிய மீனவர்களும் இன்று திங்கட்கிழமை யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

பருத்தித்துறை பிரஜைகள்குழுத்தலைவர் பேராசிரியர் திரு வி.கே. கணேசலிங்கம் இவர்களை அரசாங்க அதிபரிடம் ஒப்படைப்பார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மூங்கிலால் அமைக்கப்பட்ட வீடு போன்ற வள்ளத்தில் இவர்கள் அறிவிழந்த நிலையில் கரை ஒதுங்கினர்.

இம்மீனவர்களை தாளையடிப் பகுதி பொது மக்கள் பாதுகாத்து வடமராட்சி வடகிழக்கு (பருத்தித்துறை) உதவி அரசாங்க அதிபர் திரு.வை. வேலும் மயிலுவிடம் கடந்த சனிக்கிழமை ஒப்படைத்தனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு வை வேலும் மயிலும் இந்நான்கு மீனவர்களையும் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கத்திடம் ஒப்படைத்தார்.

பல நாட்களாக கடலில் தத்தளித்த இவர்கள் உணவு இன்மையால் பச்சை மீனை சாப்பிட்டனர்.

# முகமூடி தலையாட்டவில்லை! பொலீஸ் காவல் வாபஸ்!!

மட்டக்களப்பு, மார்ச் 3

முகமூடி தலையாட்டாததைத் தொடர்ந்து, மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று தமிழருக்கு போடப்பட்டிருந்த பொலீஸ் பாதுகாப்பு நேற்று வாபஸ் வாங்கப்பட்டது.

வவுணதீவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த மூன்று பேர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

உடனடியாக அவர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

நேற்று முகமூடி நபர் ஆஸ்பத்திரிக்கு ஆயுதப்படையினரால் கொண்டு வரப்பட்டார் காயமடைந்த மூன்று பேரின் முன்னால் முகமூடி நபர் நிறுத்தப்பட்டார்.

அவர்களைப் பார்த்து முகமூடி நபர் தலையாட்ட மறுத்துவிட்டார்.

அதைத் தொடர்ந்து போடப்பட்ட பொலீஸ் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது.

## விமானத்தில் 28 தங்க பாளங்கள்

கொழும்பு, மார்ச் 3

லண்டனில் இருந்து கடந்த சனிக்கிழமை வந்த எயர் லங்கா விமானத்தின் கழிவுக் கூடத்தில் 28 தங்கப்பாளங்கள் அனாதரவாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

கட்டுநாயக்காவில் வைத்து கண்டுபிடிக்கப்பட்ட இத்தங்கப் பாளங்களின் பெறுமதி 11 லட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கராயர் வழக்கு தீர்ப்பு இன்று

கொழும்பு,மார்ச்.3

சிங்கராயர் வழக்கு மீதான தீர்ப்பு இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழங்கப்படுகிறது.

இந்த வழக்கு 179 தினங்கள் நடைபெற்றது.

நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றித் தெரிந்திருந்தும் அது பற்றிய தகவலைத் தெரிவிக்கத் தவறி இருந்தார் என்பதே சிங்கராயர் மீதான பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

## மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

பருத்தித்துறை, மார்ச் 3

இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய அலுவலகம் முன்பாக பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவின் ஆதரவுடன் பொது மக்களால் மேற்கொள்ளப்படவிருந்த மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

பருத்தித்துறையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த நான்கு வாரங்களாக இந்த வங்கிக் கிளை மூடப்பட்டிருந்தது.

இன்று திங்கட்கிழமை முதல் பருத்தித்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் "ஓசி" அரிசி பெற கியூ!

கிளிநொச்சி, மார்ச்.3

கவச வாகனத்தில் வந்த இராணுவத்தினர் பொதுமக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கினார்கள்.

இச்சம்பவம் நேற்று கிளிநொச்சிச் சந்தையில் நடந்தது.

இராணுவத்தினர் 2 மூடை அரிசியைக் கவச வாகனத்தில் ஏற்றி வந்தனர்.

ஒருவருக்கு 2 படி அரிசி வீதம் அவர்கள் இலவசமாக விநியோகிக்க ஆரம்பித்த போது அரிசிக்கு சனக் கூட்டம் முண்டி அடித்தது.

கியூவில் வரும்படி கூறி இராணுவத்தினர் அரிசியை விநியோகித்தனர்.

## தமிழ் பத்திரிகையாளரும் வவுணதீவு சம்பவத்தில் கொலையுண்டார்

மட்டக்களப்பு, மார்ச் 3

வவுணதீவில் தோணி ஒன்றில்சென்று கொண்டு இருக்கையில் சுடப்பட்ட ஐந்து பேரில் மூவர் அடையாளம் காணப்பட்டனர்.

இருவரின் சடலங்களே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீரகேசரியின் வவுணதீவுச் செய்தியாளர் கே. எஸ். இரத்தினசிங்கம் (வயது 30), இராசநாயகம் (15 வயது) ஆகியோரின் சடலங்களே நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டவை.

இரத்தினசிங்கத்தின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பதவிஏற்பு

சென்னை, மார்ச் 3

தமிழ் நாட்டில், 16 ஆண்டுகளுக்கு பின்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்களும், உறுப்பினர்களும் இன்று பதவியேற்கிறார்கள்.

# இராணுவம் வாபஸாகும் வரை பேச்சு வேண்டாம்

## மத்திய அரசுக்கு வேண்டுகோள்

சென்னை, மார்ச் 2

இலங்கைத் தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவம் வாபஸ் வாங்கப்படும் வரை இலங்கை அரசுக்கும் தமிழ் அமைப்புக்களுக்கும் இடையே மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க இந்தியா நடவடிக்கை எடுக்கக் கூடாது.

இப்படி சென்னையில் இயங்கும் தமிழ்ஈழ ஆதரவாளர் அமைப்பு, இந்திய அரசுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் இலங்கை அரசினால் நடத்தப்படும் விமானத் தாக்குதல் குறித்து இந்திய அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு இந்திய அரசைக் கோரி உள்ளது.

# இந்தியாவுடன் பகைமையை வளர்த்தால் கஷ்டம் வரும்

## இலங்கரத்தின எச்சரிக்கிறார்

கொழும்பு, மார்ச் 3

இந்தியாவுடன் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்குப் பதிலாக இலங்கை அரசு பகைமையைத்தான் வளர்க்கிறது. அதனால் நாட்டுக்குக் கஷ்டம் வரப்போகிறது.

இப்படி இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு. ரி. பி. இலங்கரத்தின சொன்னார்.

கட்சியின் வருடாந்தக் கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடந்தது.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. இலங்கரத்தின மேலும் சொன்னதாவது;

நாடு நெருக்கடியில் மூழ்கி உள்ளது. பொது மக்களும், சிப்பாய்களும் இறந்துகொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசும் தீவிரவாதிகளும் அரசியல் தீர்வு காணப்படுவதை விரும்பவில்லை.

இந்திய நல்லெண்ணத்தை நாம் வளர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக இலங்கை அரசோ பகைமையைத்தான் வளர்க்கிறது. இதனால் நாட்டுக்கு கஷ்டம் வரப்போகிறது. — என்று திரு. இலங்கரத்தின எச்சரித்தார்.

## சுபநேரம்

03 - 03 - 1986

திங்கட்கிழமை

சுபநேரம்:
12 27 முதல் 1-57 வரை
ராகுகாலம்:
7-57 முதல் 9-27 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அட்டமி வைகறை 6 27 வரை

## 5 மீனவர்கள் விடுதலை

காங்கேசன்துறை, மார்ச் 3

11 மாதங்களுக்கு முன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 மீனவர்கள் அவர்களது மனைவிமாரின் விண்ணப்பத்தை அடுத்து விடுதலை செய்யப்பட்டனர்.

மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற சமயம் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் சின்னத்தம்பி காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 3

மருத்துவத்துறை பேராசிரியரும், மகப்பேற்று வைத்தியத்துறை நிபுணருமான டாக்டர் இ. சின்னத்தம்பி தனது எழுபத்தைந்தாவது வயதில் காலமானார்.

பல ஆங்கில வைத்திய நூல்களை தமிழில் மொழி பெயர்த்து தமிழ்மொழி

(4 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படங்களில் கவர்ச்சி; ராதாவின் விளக்கம்

இப்பொழுது வெளிவரும் அதிகமான படங்களில் படுகவர்ச்சியான நடனங்கள் இடம் பெறுகின்றன.

இதுபற்றி கவர்ச்சி நடனமாடும் நடிகைகளிடம் கேட்டால்- 'கதாநாயகிகளை விடவா நாங்கள் கவர்ச்சி காட்டுகின்றோம்' என்கிறார்கள்.

இக்குற்றச்சாட்டு குறித்து ராதா இப்படிச் சொல்கிறார்.

'கனவுக் காட்சிகள், கவர்ச்சி நடனக் காட்சிகள், சிருங்காரம் ஆகியவைகள் எல்லாம் ஒவ்வொருவரின் ரசனைக்கேற்பவும் மொழிக்கேற்பவும் மாறுபடக் கூடியவை.

மலையாளப் படங்களில் கதாநாயகிகள் முதல் அனைவருமே மேலாடை இல்லாமல் ரவிக்கை மட்டுமே அணிந்து நடிப்பார்கள்.

இது கவர்ச்சியாக இருந்தாலும், அவர்களின் பழக்கம் அது. யாரும் தவறாக எண்ணமாட்டார்கள்.

அதேமாதிரி நமது தமிழ்ப் படங்களில் நான் நடித்தால், பார்க்கும் பெண்கள் எல்லோரும் என்னைத் திட்டுவார்கள்.

அதேபோல், நமது தமிழ்ப் படங்களின் காதல் காட்சியில் மரங்களைச் சுற்றி காதலர்கள் ஓடுவதும் கீழே விழுந்து கட்டிப் புரள்வதும் மலையாளத்தில் கிடையாது.

என்னுடைய முதற் படமான 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் பல கவர்ச்சிக் காட்சிகள் இருந்தன.

ஆனால் அவை அத்தனையும் சுவையாக, விரசமில்லாமல், அழகாக இருந்தன என்று தான் எல்லோரும் சொன்னார்கள்.

படம் எடுக்கும் முறையில் தான் கவர்ச்சி தங்கியுள்ளது. அதற்காக நட்சத்திரங்களைக் குற்றம் சொல்வதால் பயனில்லை - என்கிறார் ராதா.

## ஈரான் முறைப்பாட்டுக்கு ஈராக் மறுப்பு

தெஹ்ரான், மார்ச் 2

ஈராவிய குடிமக்கள் மீது ஈராக் இரசாயன ஆயுதப்பிரயோகம் செய்துள்ளது என்ற ஈரானின் குற்றச்சாட்டுக்கு ஈராக் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஈரானின் முறைப்பாடு தொடர்பாக ஐ. நா. சபை நிபுணர் குழுவொன்று விசாரணைகளை இப்பொழுது மேற்கொண்டுவருகிறது.

விசாரணைகள் தொடர்பான பூரண அறிக்கையொன்று இக்குழுவினால் தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்படும்.

இதனிடையே ஈரான்-ஈராக் போர் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சுவீடனில் பிரதிப் பிரதமர் கட்சித் தலைவரானார்

## ஆளும் ஜனநாயகக் கட்சி தெரிவு செய்துள்ளதாக அறிவிப்பு

ஸ்டொக்ஹோம், மார்ச், 2

சுவீடன் நாட்டின் பிரதிப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள இன்வார் கால்சன் ஆளும் ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

காலஞ்சென்ற பிரதமர் கால்மேயின் இறுதி மரணச்சடங்குகள் எதிர் வரும் 15ஆம் திகதி இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுவீடிஷ் கத்தோலிக்க திருச்சபை மக்களை அமைதியாக இருக்குமாறும் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

அரசு ரீதியான வைபவங்களும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கால்மேயின் கொலைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பான தேடுதல் வேட்டையில் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் கால்மேய் தமது மனைவியுடன் திரைப்படமொன்றைப் பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்தச் சூட்டுச் சம்பவத்துக்கு இலக்காகியதாவும் திருமதி கால்மேய்க்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சஞ்சிகைக்கு தடை உத்தரவு

பாரிஸ், மார்ச் 2

பிரான்ஸ் பிரதமர் லோறன்ஸ் வேபியஸின் மனைவியின் ஆடையற்ற கோலப் படங்களை வெளியிட்ட சஞ்சிகையொன்றை அங்குள்ள நீதிமன்றம் தடை செய்துள்ளது.

இந்தப் படங்களைக் கொண்ட அந்தசஞ்சிகையின் பிரதிகள் அனைத்தையும் விற்பனைக்கு விடக்கூடாதெனவும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

## ஐ. நா. சபை வெகுமதி

ஐக்கிய நாடுகள், மார்ச். 2

மெக்ஸிக்கோவிலுள்ள தேசிய குடிசன சமூகம் 'கொனுப்' ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்படும் குடிசன விருதைப் பெறுகிறது.

1983 ஆம் ஆண்டுக்கான விருது இது.

டிப்ளோமா சான்றிதழ் ஒன்றும் தங்கப் பதக்கமும் 25,000 டொலர் பணமும் இந்தப் பரிசுக்காக ஒதுக்கப்படுகிறது.

குடிசனப் பிரச்சினைகளுக்கும் அதன் தீர்வுகளுக்கும் அறிவு விழிப்பு ஏற்படக் கூடியதாக பங்களிப்புச் செய்த தனி நபர் அல்லது நிறுவனங்களுக்கு இந்த வெகுமதியை ஐ. நா. சபை வழங்குகிறது.

## கெய்ரோவில் நடந்த பொலீஸ் கலவரம்

### 36 பேர் மரணம் 21 பேர் காயம்

கெய்ரோ, மார்ச். 2

சென்றவாரம் எகிப்தில் கெய்ரோவை அடுத்த பகுதிகளில் இடம்பெற்ற சண்டைகளில் 36 பேர் கொல்லப்பட்டனர். 21 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள்.

நிலைமைகள் இப்பொழுது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் ஊரடங்கு உத்தரவும் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

அவசரகால சேவை நோக்கத்துக்கான பொலீஸ் பிரிவினரும் குடிமக்களும் சேர்ந்து அரசு எதிர்ப்புக் கலவரங்களில் ஈடுபட்டனர்.

இந்தக்கலவர எழுச்சியை அடக்க ஏராளமான டாங்கிகளும் மற்றும் கவச வாகனங்களும் ஆங்காங்கே உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அரசு நிர்வாக நடவடிக்கைகளும் மற்றும் வியாபார நடவடிக்கைகளும் மக்கள் நடமாட்டமும் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதாக அரசுச் செய்திகள் தெரிவித்தன.

## ரயில் விபத்து

திருவனந்தபுரம், மார்ச் 2

கேரளம் தலைச்சேரியருகே நடந்த ரயில் விபத்தில் 27 பேர் மரணமடைந்துள்ளனர் மேலும் 8 பேர் காயம் அடைந்துள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு மத்திய ரயில்வே துறை மந்திரியும் கேரள முதலமைச்சர் கருணாகரனும் விரைந்துள்ளனர்.

விபத்து பற்றிய தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## வெளி உலகில்

பிலிப்பீன்ஸ்

## ஆயுதப்படை பதவிகளில் புதிய மாற்றங்கள்

### 22 ஜெனரல்களுக்குப் பதவி ஓய்வு

மணிலா, மார்ச், 2

பிலிப்பீன்ஸ் ஆயுதப் படை பிரிவுகளில் மாற்றங்கள் பலவற்றைப் படிப்படியாகப் புகுத்தப்படும்.

ஜனாதிபதி திருமதி அக்கியூனோ புதிய மாற்றங்களை ஏற்படுத்த கருத்துக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முன் நடவடிக்கையாக மார்க்கோஸ் ஆதரவாளர்கள் என்று கருதப்படும் 22 ஜெனரல்களைப் பதவியிலிருந்து ஓய்வு பெறச் செய்துள்ளார்.

இவர்கள் மார்க்கோஸின் நெருங்கிய சகாவான ஆயுதப்படைகளின் தளபதி ஜெனரல் வேபியன் வேர் தலைமையில் செயற்பட்டவர்களாவர்.

பொறுப்பு வாய்ந்த புதிய ஜெனரல்களை நியமிக்கும் ஆலோசனைகளை ஆயுதப்படைகளின் பிரதம தளபதி பிடல் றமோஸ் திருமதி அக்கியூனோவுக்கு வழங்குவார் என நம்பப்படுகிறது.

## கொள்ளை

கொழும்பு, மார்ச் 3

அனுராதபுரம் பொலீஸ் பகுதியில் உள்ள சிங்களக் குடியிருப்பாளர் ஒருவரின் வீடு ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி உழவு இயந்திரம், நகைகள், பணம் முதலியவற்றைக் களவாடிச்சென்றது.


### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 69, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

### சைவ சமய தீட்சை

சிவராத்திரி தினத்தன்று சைவ சமய தீட்சை செய்ய விரும்பும் ஆலயங்கள், தொண்டர் சபைகள், பாடசாலைகள் சமய தீட்சை,அனுட்டான விதி நூலை சுயவிலாசமிட்ட 75 சத முத்திரையுடன் கூடிய லோங் என்வலப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

### மகா சிவராத்திரி வரலாறு

10 மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் அனுப்பி மகா சிவராத்திரி வரலாற்று நூலைப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் அன்பர்கள் சுயவிலாசமிட்ட 75 சத முத்திரையொட்டிய லோங் என்வலப் அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

### நவா மினி

(உஷா மினி முன்பாக)
248 | 5, K. K.S. Road, JAFFNA.

**Young Warior's**

(யங் வோறியர்ஸ்)

தனது தங்கையைக் கெடுத்த கும்பலை தனது குழுவினருடன் சென்று பழிவாங்கும் அதி நவீன ஆயுதத் தாக்குதல் நிறைந்த படம்.


## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

மட்டக்களப்பு, அம்பாறை

# ஆயுதப்படை முகாம்களில் மனித உரிமை மீறல்?

## விசாரணை நடத்தக் கோரிக்கை

மட்டக்களப்பு, மார்ச்.3

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள ஆயுதப்படை முகாம்களில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெறுவதாகக் கூறப்படுவது குறித்து ஆராய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு பிரஜைகள் குழு, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கு அண்மையில் அனுப்பி வைத்த கடிதமொன்றில் கோரிக்கை விடுத்திருக்கிறது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் கைது செய்யப்படும் இளைஞர்கள் ஆயுதப்படை முகாம்களில் சித்திரவதை செய்யப் படுவது குறித்து முறைப்பாடுகள் எமது கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

இந்நிலையில் இளைஞர் ஒருவருக்கு ஏற்பட்ட சம்பவத்தை தங்கள் கவனத்திற்கு குறிப்பாக சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

அந்த இளைஞரின் இரு கைகளும் பின்புறமாக கொண்டுவரப்பட்டு இரு பெருவிரல்களும் ஒன்றாக கட்டப்பட்டன. அவ் விரல்கள் ஊடாக ஊசிகள் உட்புகுத்தப்பட்டன. பின்பு தொடர்ச்சியாக எஸ் — லோன் குழாய்களினால் தாக்கப்பட்டார். நிலத்தில் குப்புற படுக்கும்படி பலவந்தப்படுத்தி அதே குழாயினால் இரு பாதங்களிலும் தாக்கப்பட்டார்.

இப்படி பல முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கின்றன. இதனால் வேதனைக்கும் பீதிக்கும் உள்ளாகின்றோம்.

இத்தகைய செயல்களை தடைசெய்யுமாறு கோருகிறோம். இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளும் பட்சத்தில் சாட்சியங்களை தங்கள் முன் சமர்ப்பிக்கவும் தயாராகவுள்ளோம்.

இதேவேளை தாங்கள் மட்டக்களப்புக்குவருகை தந்த சமயம் படையினரால் கைதுசெய்யப் படுவோர் பெயர், விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு படையினருக்கு விடுத்த பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிவபாலன் மீண்டும் தலைவர்

திருகோணமலை, மார்ச் 3

திருமலைப் பிரஜைகள் குழுத் தலைவராக மீண்டும் திரு. க. சிவபாலன் தெரிவானார்.

இணைச் செயலாளர்களாக வண. பிதா. பீற்றர் குருகுல ஆராச்சி, திருமதி. சுபாஷினி வரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## பலாலியில் பீரங்கி வேட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 3

சனிக்கிழமை காலை இராணுவ முகாமிலிருந்து படையினர் கடற்பகுதியை நோக்கி பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகச் சொல்லப்படுகிறது.

நண்பகல் 11. 30 மணி தொடக்கம் 12-45 மணி வரை கடலில் நடமாடிய மீன்பிடி படகுகளை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் பலத்த சத்தத்துடன் தீர்க்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இதனால் அந்தப் பகுதிகளில் சனி நண்பகல் பதற்றம் நிலவியது.

## இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை இன்று முதல் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை அலுவலகம், இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மந்திகை ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி பருத்தித்துறை நகரில் நடந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பருத்தித்துறைக் கிளை மூடப்பட்டது என்பது தெரிந்ததே.

## திருமலைக்கு புதிய எஸ். பி.

திருகோணமலை, மார்ச் 3

திருகோணமலை பொலீஸ் அதிபராக திரு. ரி. என். டி. சில்வா பதவி ஏற்றார்.

இதுவரை இங்கு ... பொலீஸ் அதிபராக இரு ... பதவி ஏற்றிருந்தார்.

## அரைகுறைச் சவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

கடைகள் பூட்டப்பட்டிருந்ததால் கோபமடைந்த சீருடையினர் சந்தைக் குத்தகைக்காரர் ஒருவரைப் பிடித்து அவரது தலைமயிரையும் மீசையையும் அரைகுறையாக வெட்டினராம்.

வடக்கின் விவசாயப் பிரதேசம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது.

கடந்த வியாழனன்று ஹர்த்தால் காரணமாக கடைகள் பூட்டப்பட்டிருந்தன. அதனால் அத்தியாவசிய பொருள்களை வாங்க முடியாமல் சீருடையினர் தவித்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் கோபமடைந்த சீருடையினர் அடுத்த நாள் சந்தைக் குத்தகைக் காரரைப் பிடித்து இந்த வேலை செய்தார்களாம்.

## இலங்கை அரசை நாகரிக உலகு கண்டிக்க வேண்டும்

### ஈ. தே. வி. மு. கோரிக்கை

சென்னை, மார்ச் 3

இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசை நாகரிக உலக நாடுகள் கண்டிக்க வேண்டும்.

இப்படி ஈழம் தேசிய விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றில் கோரியுள்ளது.

சென்னையில் விடுத்த அறிக்கையில், இலங்கை அரசு அப்பாவித் தமிழரைப் படுகொலை செய்து வருகிறது. அத்தோடு குண்டுகளை வீசி தமிழ்ப் பகுதிகளில் உள்ள வேளாண்மை நிலங்களை பாலைவனமாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

உலக நாடுகள் இதனைக் கண்டிக்க வேண்டும்—

இப்படிக் கூறப்பட்டுள்ளது.

## நாவற்குழியில் துப்பாக்கிப் பிரயோகம்

கைதடி, மார்ச் 3

சனிக்கிழமைகாலை 6-00 மணி அளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வந்தனர். அப்போது நாவற்குழி சந்திப் பக்கமிருந்து இராணுவத்தினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனால் முகாமை நோக்கித் திரும்பிய இராணுவத்தினர் சிறிது நேரம் கழித்து நடைபவனியாக முகாமிலிருந்து வந்து சமீபமாக உள்ள வீடுகளைச் சோதனையிட்டனர்.

வேறு எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை.

## பல் டாக்டர்கள் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச். 3

பல் டாக்டர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இடைக்கால மாதாந்த அலவன்ஸாக ஆயிரம் ரூபாவைப் பல் டாக்டர்களுக்கும் வழங்குவது என்ற அமைச்சரவையின் முடிவைத் தொடர்ந்தே கடந்தவாரம் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

## காணி மீண்டும் பாடசாலையிடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி, மார்ச், 3

இராணுவத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்துக்குச் சேர வேண்டிய காணியை மீண்டும் வித்தியாலயத்திடம் கையளிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட இணைப்பதிகாரி கேணல் கொப்பேகடுவ கடந்த வாரம் இப்பாடசாலைக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் அவதானித்தார்.

இதன் பின்பே காணியை மீண்டும் பாடசாலை நிர்வாகத்தின் பொறுப்பில் விட அவர் அனுமதி அளித்தார்.

இராணுவத்தினர் பிரஸ்தாப காணியையும், கட்டடம் ஒன்றையும் சுற்றி ஏற்கனவே முள்கம்பி வேலி அடைத்திருந்தனர்.

இதனால் இப்பாடசாலைக்குப் பிள்ளைகள் செல்ல அஞ்சுகின்றனர் என்று செய்தி வெளியாகி இருந்தது.

## ஆண்டு 5 ஆசிரியருக்கு சேவைக்காலப் பயிற்சி

மானிப்பாய், மார்ச்.3

1986ஆம் ஆண்டில் ஆண்டு 5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும் செயலமர்வும் மார்ச் மாதம் 1,2,15,16 22 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

மானிப்பாய்வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் பயிற்சி வகுப்புக்களை தலைமை வகித்து நடத்துவார்.

ஆண்டு 5 இல் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும்இப்பயிற்சியைப் பெறுதல் அவசியம் என்றும், ஒவ்வொரு ஆசிரியரும் முழுமையாகப் பயிற்சி பெறுதல் முக்கியம் என்றும் திரு. ச. தனஞ்செயன் அறிவித்துள்ளார்.


### பதவி வெற்றிடம்

பயிற்றப்பட்ட மருத்துவத் தாதி

விரைவில் ஆரம்பிக்கவுள்ள மருத்துவ நிலையத்திற்கு இரண்டு (2) மருத்துவத் தாதிமார் உடனடியாகத் தேவை. காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை 07-03-86க்கு முன் சான்றிதழ்களுடன் நேரில் வரவும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

Rainbow Travels

ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

"ஒப்பில்லாத உயர்வொடு கல்வியும் எய்ப்பில் வீரமும் இப்புவி ஆட்சியும் தப்பிலாத தருமமுங் கொண்டேயாம் அப்பனே நின் அடிபணிந்துய்வமால்"

-சுப்பிரமணிய பாரதியார்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
03-03-86 உ. வெ. 23

## மருந்தும் மரணமும்

பென்சிலின் ஊசி மருந்து ரகங்களில் ஒன்றான பென்ஸத்தினை சகல அரசாங்க ஆஸ்பத்திரிகளிலிருந்தும் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப ஊசிமருந்து ஏற்றப்பட்ட இரண்டு நோயாளிகள் காலி ஆஸ்பத்திரியில் மரணம் அடைந்தார்கள். அதனைத் தொடர்ந்தே சுகாதார அமைச்சு இந்த அவசர நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கத் திணைக்களம் ஒன்றின் கவனயீனத்தை, பொறுப்பற்ற தன்மையை இது எடுத்துக்காட்டுகிறது. சுகாதாரப்பகுதி அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கண்டிக்கப்படவேண்டியவர்கள். தண்டிக்கப்பட வேண்டியவர்களுமாவர்.

மனிதனின் நோய் தீர்ப்பதற்கு என்றே மருந்து கொடுக்கப்படுகிறது. அந்த மருந்தே உயிர்போக்கும் எமனாக மாறினால் நிலைமை என்னாவது?

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நாளாந்தம் பல்லாயிரக் கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெறுகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் பென்ஸத்தின் போலவே ஆட்கொல்லி மருந்துகளைக் கொடுத்தால்....? ஆஸ்பத்திரிகள் கொலைக்களங்களாக மாறிவிடும். ஆஸ்பத்திரிகளே கொலைக்களங்களாக மாறினால்; நோய் வருவோர் எல்லோரும் இறப்பது நிச்சயம் என்ற நிலை உருவாகிவிடும். அப்படியான அரசாங்க ஆஸ்பத்திரிகள் ஒருநாட்டுக்குத் தேவைதானா?

பென்ஸத்தின் மருந்தை உரியமுறையில் பரிசோதியாது அனுப்பியது போலவே, ஏனைய மருந்துகளையும் அனுப்பிவருகிறார்களோ என்று சந்தேகப்பட்டால் அதில் என்ன தவறு?

அரச ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் பணியை அரசாங்க மருந்துக் களஞ்சியமே செய்துவருகிறது. ஆட்கொல்லிகளாக இல்லாத மருந்துகளை ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கும் முழுப் பொறுப்பும் அதனையே சார்ந்தது. அந்தப் பொறுப்பை வேறு எந்த ஸ்தாபனத்திடமும் அது தட்டிக்கழிக்கமுடியாது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் மருந்துகளை, அவை பாவனைக்கு உகந்தவையா, நோய் தீர்க்கும் சக்தி கொண்டவையா, அல்லது ஆபத்தான விளைவைக் கொடுக்கக் கூடியவையா என்று பரிசோதித்து, தகுதியையும் தரத்தையும் நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பும் மருந்துக் களஞ்சியத்தைச் சார்ந்ததே.

ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்கள், மருந்துகள் பாவனைக்கு உகந்தவை என்று கருதிக்கொண்டே அவற்றை நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். எனவே பாவனைக்கு உதவாத மருந்துகளால் ஏற்படும் விளைவுகளுக்கான பொறுப்பை அவர்கள்மேல் சுமத்த முயல்வது நியாயமற்றதாகிவிடும்.

ஆயிரம் பேரைக்கொன்ற அரை வைத்தியர்கள் இந்தக் காலத்திலும் இல்லாமல் இல்லை. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் பாவம் மருந்துக் களஞ்சிய அதிகாரிகளையே போய்ச் சேருகிறது.

நோயாளர்களின் உயிர்களுடன் சம்பந்தப்பட்ட மருந்துகளை விநியோகிப்பதில் கவனமும் பொறுப்புணர்ச்சியும் சேவை மனப்பான்மையும் இருந்தால் தவறுகள் ஏற்பட இடமில்லை.

பென்ஸத்தின் ஊசிமருந்து முன்னர் ஒரு தடவையும், ஆபத்தான விளைவைக் கண்ட பின்னர் திரும்பப் பெறப்பட்டது. இரண்டாவது முறையும் அதே விதத்தில் கெடுதி நடந்திருக்கிறது. அரச மருந்துக் கூட்டுத்தாபன அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் மன்னிக்கவே முடியாது. அவர்களுக்கு மரணதண்டனை வழங்கச் சட்டம் கொண்டுவரவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு மற்றவரின் உயிரின் அருமை தெரியும்; புரியும்.

வெறும் விசாரணையும் நடவடிக்கையும் வேலை நீக்கமும் பலன் தராது. கற்பழித்தலுக்கும், கப்பம் கேட்பதற்கும் மரண தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டிருப்பது போல, மக்களுக்கு உயிராபத்து தரக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வோர் தயாரிப்போர், விநியோகிப்போருக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு பொறுப்பு உணர்வும் கவனயீனத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளின் தாக்கங்களைப் புரிந்து கொள்ளும் தன்மையும் உண்டாகும்.

மனித பாவனைக்கு ஒவ்வாத மருந்துகளைத் தருவிக்கும் பணியைச் செய்வோரும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

தமக்குக் கிடைக்கக் கூடிய கமிஷன், வேறுவித வெட்டுப் பணம் என்பவற்றைக் கருதி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் மருந்துகளைத் தருவிப்பதற்கு இவர்கள் பின்னிற்கமாட்டார்கள். எனவே மருந்து இறக்குமதி ஏஜன்சிகளையும் தண்டிக்க வேண்டும்.

அதாவது அவற்றைக் கொண்டு நடத்துவோருக்கும் மரண தண்டனை விதிக்க வகை செய்ய வேண்டும்.

தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து பணியாற்றாதவர்களையும், குறுக்கு வழியில் பணம் தேடுவோரையும், ஊழல் செய்வோரையும் திருத்துவதற்கு மரண தண்டனையை விட இப்போது வேறு மார்க்கம் இருக்க முடியாது. அந்த அளவுக்குச் சமூகம் சீரழிந்து போய் விட்டது.

# விவசாயிகள், கூலியாள் கைதாவது நிறுத்தப்படும்

## கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்கு உத்தரவாதம்

கிளிநொச்சி, மார்ச். 3

நாளாந்தம் கமவேலைகளுக்குச் செல்லும் விவசாயிகளையும், கூலியாட்களையும் தேவையற்ற முறையில் கைதுசெய்யாதிருக்க கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவ உறுதியளித்தார்.

கிளிநொச்சிபிரஜைகள் குழுவினருக்கும் கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியின் அலுவலகத்தில் சமீபத்தில் நடந்தது.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் கிளிநொச்சியில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றி எடுத்துரைத்தனர்.

கிளிநொச்சிப் பகுதியில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள வேளை விவசாயிகளும் கூலியாட்களும் இரவும் பகலும் தமது வேலைகளைக் கவனித்துவரும்போது இராணுவம் அப்பகுதிகளுக்குச்சென்று நிரபராதிகள் பலரைத் தேவையற்ற முறையில் கைதுசெய்து வருவதாகவும்—

அப்பகுதிகளில்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அப்பாவிகளின் உயிர் பறிக்கப்படுவதாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

தவிர கிளிநொச்சி மக்களின் வாகனங்கள் சில இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு இராணுவமுகாமில் வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் பலர் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். இதுகுறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைவிட கிளிநொச்சி மாவட்டத்தில் கைது செய்த இதுவரை விடுதலை செய்யப்படாதிருப்பவர்கள்பற்றியும் கூறப்பட்டது.

இவற்றைக் கேட்ட இராணுவ இணைப்பதிகாரி இராணுவத்தினரின் கடமைகளைக் கட்டுப்படுத்துவது தவிர ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக மக்களுக்கு இடையூறு ஏற்படாதவிதத்தில் தமது கடமைகளை மேற்கொள்ளவுள்ளதாகக் கூறினார்.

இச்சந்திப்பின்போது கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவின் தலைவர் டாக்டர் கே. சுப்பையா, உபதலைவர் சி. ஆர். சலேசியஸ், நிர்வாகிகளான அ. தாமோதரம்பிள்ளை, எஸ். கோபால், எம். சூசைப்பிள்ளை, கே எஸ் ஆறுமுகம், எஸ், நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதியசட்ட விதி

கொழும்பு, மார்ச் 3

வெளிநாட்டு உல்லாசப் படகுகள் கொழும்பு, காலி, திருகோணமலைத் துறைமுகங்களுக்குள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

வேறு இடங்களுக்குச் செல்ல இப்படகுகள் அனுமதிக்கப்படமாட்டா.

இது சம்பந்தமான புதிய சட்டவிதிகள் நேற்று பாதுகாப்பு அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டன.

நாட்டின் பாதுகாப்புக் கருதி புதிய விதிகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட விதிகளை மீறுவோர் கடுமையாக தண்டிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கள்ளு உற்பத்தி விற்பனை குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 3

''கள்ளு உற்பத்தியாளர், விற்பனையாளர் கவனத்திற்கு'' என்ற தலைப்பில் ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது.

அதன் விவரம் வருமாறு:

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் நிர்வாகங்கள் சீர்கெட்டு இருக்கும் வேளையில் தனியார் கள்ளு விற்பனையாளர்கள் தம்மிஷ்டப்படி கள்ளை விற்பனை செய்வதால் எமது பிரதேசத்தின் பாரிய கூட்டு அமைப்பான தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் இயங்க முடியாத நிலையில் உள்ளது.

இந்நிலை தொடருமானால் பல ஆண்டு காலம் கூட்டு அமைப்பாக இயங்கிய இந்நிறுவனம் செயலிழக்க வேண்டி வரும்.

இதைக் கருத்தில் கொண்டு சகல தனியார் கள்ளு விற்பனையாளர்களும் உடனடியாகத் தமது தனிப்பட்ட விற்பனையை கைவிட்டு கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனை செய்யும் படி வேண்டுகிறோம்.

கூட்டுறவை பாதுகாக்கும் ஒரு கட்டமாக யாழ் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூ. சங்கம் தற்போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பூரண கட்டுப்பாட்டினுள்இயங்க இருப்பதால் சகல கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களும் தங்களது பழைய கசப்பான அனுபவங்களை மறந்து தனியாருக்கு கள்ளு விற்பனை செய்வதைக் கைவிட்டு கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனையை தொடர வேண்டும்.

கூ. சங்கம் மீது ஏதாவது முரண்பாடுகள் இருந்தால் அதை உடனடியாக எமது இயக்கத் தோழர்களுக்கு அறியத் தரவும்.

இதற்கான கட்டுப்பாடுகள்–

✻ சங்கத்தினால் இலக்கமிடப்பட்ட மரங்கள் மட்டுமே சீவுவதற்கு அனுமதி பெற்றதாகும்.

✻ சங்கத்தின் அங்கத்தவர் மட்டுமே கள்ளு இறக்க அனுமதியுடையவர்.

• கள்ளு விற்கும் உரிமை சங்கத்திற்கு மட்டுமே உண்டு.

✻ யாழ் மாநகர எல்லைக்குள் விற்கப்படும் கள்ளு சங்கத்தினால் மட்டுமே விற்கப்படல் வேண்டும்.

✻ வெளிச்சங்கங்களில் இருந்து யாழ் மாநகர எல்லைக்குள் வரும் கள்ளு யாழ் சங்கத்தினூடாகவே விற்பனை செய்யப்பட வேண்டும்.

இதுவரை அங்கத்தவரல்லாதவர்கள் சங்கத்தின் அங்கத்தவராக அனுமதிக்கப்படுவர்.

இவ்வேண்டுகோளை மீறி செயல்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகிறோம்.



### பொய்யாமொழி

குறள்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

பொருள்:

அனிச்சம் பூவானது மூக்கினால் முகர்ந்தாலே வாடிவிடும். அது போலே வெறுப்பு வெளிப்பட நோக்கினாலே போதும்; விருந்தினர் முகமும் வாடி விடும்

# சிவராத்திரியை முன்னிட்டு யாழ் சித்தாந்த சேவை இயக்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச். 3

சிவராத்திரி திருநாளை முன்னிட்டு ஒரு வாரகாலத்துக்கு கந்த புராண பாராயணத்தைக் சைவ ஆலயங்களில் ஓதிசைவப் பெருமக்கள்இடர்களைந்து இன்பம் எய்த வேண்டும்.

யாழ் சித்தாந்த சேவை இயக்கத்தினால் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

சபையின் சார்பில் இயக்க கௌரவ சேவையாளர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு காணப்படுகிறது.

கந்தபுராணத்தில் தக்ஷ காண்டத்தில் உள்ள சிவராத்திரி கதைப்படலத்தைத் தக்கன் சிவபூசை செய்த படலத்தையும் சைவ மக்கள் ஒருவார காலத்துக்கு ஓதிச் சிறப்படைய வேண்டும்.

சிவராத்திரி வழிபாடு ஒருவார காலத்துக்கு நல்லூர், நாயன்மார்க்கட்டு, திருநெல்வேலி அரியாலை, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் சைவசித்தாந்த சேவை இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

அனைத்துச் சமயத்தவர்களிடையேயும் ஒருமைப்பாடு நிலவும் பொருட்டு தாயுமானவரின் பரப்பொருள் வணக்கப் பாடல்களும் இவ்வழிபாட்டில் இடம்பெறும்.

இவ்வாறு வித்துவான் க. கணபதிப்பிள்ளை தனது அறிக்கையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

# வெளியில் உழைத்து இங்கு சீதனம் கொடுக்கும் சோக காவியம்

## 'விமானங்கள் மீண்டும் வரும்' வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 3

'தமிழ் இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகள் சென்று வியர்வை சிந்தி உடல்தேய உழைத்து, ஊதியத்தை இங்கு அனுப்பித் தங்கள் சகோதரிகளின் திருமணத்துக்கு சீதனம் கொடுக்கும் சோக காவியம் பேரன் நாவலின் கருப்பொருள்'

நெல்லை. க. பேரனின் 'விமானங்கள் மீண்டும் வரும்' நாவல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் புதன் பிற்பகல் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்றது.

அப்பொழுது கலாநிதி அ. நா. சுப்பிரமணியன் மேற்கண்டவாறு கூறினார்.

செல்வி. கலாநிதி சண்முகநாதபிள்ளை வரவேற்புரை கூறினார். மன்றத் தலைவர் செல்வன் க மணிவண்ணன் விழாவுக்கு தலைமை வகித்தார்.

யாழ். ரெலிகுளோப் உரிமையாளர் திரு. ம. சிவராசா முதல் பிரதியை நாவலாசிரியர் திரு. பேரனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

யாழ் அஞ்சல் திணைக்கள கணக்காளர் திரு. எஸ். சிவபாலன், உதவி நிர்வாகஸ்தர் திரு. டி. மாணிக்கவாசகர் ஆகியோர் சிறப்புப்பிரதிகளைப் பெற்றனர்.

பல்கலைக்கழக மாணவர் செல்வன் அ. ரவி பின்வருமாறு கூறினார்:-

தமிழ் இளைஞர்கள் தமது கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப தொழில் பெறமுடியாது இருக்கிறார்கள்.

இதன் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் அடிமைகளாக உழைக்கும் சமகால யாழ்ப்பாணப் பிரச்சினை இந்த நாவலின் கருப்பொருள் என்பது உண்மைதான்.

இப்பிரச்சினையைத் தொட்டமுதல் தமிழ் நாவல் இது என்பது சரியே.

இருப்பினும் அதனைக் கலையுணர்வுடன் வெளிப்படுத்தியதாக இல்லை. நாவலை வாசித்து முடிக்கும்போது நமக்கு ஏமாற்றம் ஏற்படுகிறது.

இந்த நாவல் ஒரு தகவல் தொகுப்பாக விவரணக் கொத்தாகக் காணப்படுகிறது.

-இவ்வாறு செல்வன் ரவி கூறினார்:-

தமிழ் மக்களிடையே இருவகை இளைஞர்களைக் காண்கின்றோம். உள்ள அமைப்பின் மத்தியிலே குடும்பப் பொறுப்பை ஏற்று சகோதரிகளுக்கு வாழ்வு தேடும் இளைஞர்கள் ஒருவகையினர்.

இப்போதுள்ள அமைப்பை மாற்றி தாக்கி எறிந்து விடிவு காண விழைபவர்கள் மற்ற வகையினர்.

இவர்களுள் முதல் வகையினரைக் குறிப்பது நாவலில் வருகின்ற பாத்திரம்.

இந்த நாவலை வாசிக்கும்போது அதனுடன் ஒன்றிப்போவது கஷ்டமாக இருக்கிறது.

- இவ்வாறு கலாநிதி மௌனகுரு வருத்தம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வாழ்க்கையை யாழ்ப்பாணத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ரயில்பாதையில் நடந்து வந்த சீருடையினர்

## கைக்குண்டு வீச்சை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம்

### வவுனியாவில் பெண் ஒருவர் காயம்

நல்லூர், மார்ச். 3

வவுனியாவில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயம் அடைந்தார்.

வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வெள்ளிக்கிழமை இரவு 8 45 மணி அளவில் வவுனியா முகாமில் இருந்த சீருடையினர் ரயில் பாதையால் நடை பவனியாக வந்து கொண்டிருந்தனர்.

ரயில் பாதைக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக்கு அருகில் வந்த சீருடையினர் வங்கியில் காவலுக்கு நின்ற காவலாளியை அழைத்தனர்.

இந்த வீதியில் இளைஞர்கள் நிற்கிறார்களா? என பார்த்து வரும்படி அவர்கள் காவலாளியைக் கேட்டனர்.

காவலாளியும் [illegible] தூரம் சென்று பார்த்து [illegible] இல்லை என்று வந்து கூறினர்.

மீண்டும் தமது நடை பவனியை சீருடையினர் தொடர்ந்தனர்.

சிலநிமிடங்களுக்குப்பின் அவர்களை நோக்கி கைக்குண்டு வீசப்பட்டது.

சீருடையினர் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

குண்டு வெடிப்பில் ரயில் பாதைக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்த பெண் ஒருவர் காயம் அடைந்தார்.

பின்னர் சீருடையினர் முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

காயமடைந்த பெண் [illegible] திராவதி (50 வயது) [illegible] ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இவருக்கு நெஞ்சிலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டன. சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

காயமடைந்தவரின் கணவன் தமது மனைவிக்கு நடந்த சம்பவம் பற்றிச் சொன்னதாவது.

சம்பவதினம் இரவு 8.55 மணி அளவில் வெளியில் கிடந்த உடுப்புக்களை எடுப்பதற்கு எனது மனைவி சென்றார்.

அப்பொழுது வீட்டுப் படலைக்கு அருகாமையில் வெடிச்சத்தம் கேட்டது. எனது வீட்டுப் படலையை துளைத்து வந்த ஏதோ ஒரு பொருள் எனது மனைவியைத் தாக்கியது. இதனால் மனைவி காயமடைந்தார்.

மனைவியை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்பு ரயில் மூலம் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்து வந்தோம்.

இப்படி அவர் சொன்னார்.

## வித்தாரம்

வாடா தம்பி முரளி, என்ன? சைக்கிளை வேகமா ஓடினாயாக்கும். விழுந்தாயாக்கும். முன் சில்லு நெளிஞ்சு போய்க் கிடக்கு.

எட, அப்பிடியே சங்கதி, நீ சரியான பக்கத்தாலை சைக்கிள் ஓடினனீ ஆம், பிழையான பக்கத்தாலை வந்தவன் மோதிப் போட்டு, உன்னை ஏசிப் போட்டுப் போறுனே.

அட உது இப்ப ஒரு புதிய விஷயமும் இல்லை. புதினமும் இல்லை நான் பேப்பரிலை போடுறதுக்கு.

உங்களைப் போல இளமட்டங்களின்ரை காலம் எல்லே இந்தக் காலம்.

காலத்துக்குக் காலம் ஒரு நாகரிகம், Trend எல்லாம் உருவாகிறது வழக்கம். அது மட்டுமில்லை ஒவ்வொரு காலத்துக்கும் ஒரு விசேஷத்துவத்தை (Speciality யை) உண்டாக்க அந்தந்தக் காலத்து இளமட்டங்கள் விரும்பிறது உண்டு.

அந்த வகையிலை பாக்கப்போனா இப்பத்தை விசேஷத்துவம் உனக்குத் தெரிய வேணுமே, சொல்லேன்!

அதை விடு. விஷயத்துக்கு வருவோம். இப்ப யாழ்ப்பாண ரவுணிலை, வாகனப் போக்குவரத்துக்கு ஒரு ஒழுங்கில்லை. ஒருவழிப்பாதை எல்லாம் பல வழிப்பாதையளாய்ப் போச்சு. வீதியாலை நடந்து போய் வர ஏலாது. நேராய் ஓடுற வாகனங்களை விட குறுக்கும் நெடுக்குமாய் ஓடுகிற வாகனங்கள் தான் அதிகம்.

போக்குவரத்துக்கு சரியான பக்கம் சும்மா கிடந்தாலும், பிழையான பக்கத்தாலை தான் வாகனங்கள் ஓடும். அப்பிடி ஓடயிக்கை எதிரே சரியான பக்கத்தாலை ஓடி வந்தவரோடை மோதிப் போட்டு, அவருக்கு ஏச்சும் குடுப்பினம். நடக்கிற சனங்கள் எண்டாப் போலை சும்மாவே தங்களுக்குத்தான் முழு வீதியும் எண்ட மமதையிலை அசையாதுகள்.

இப்ப சனமும் கூடத்தான். அதைப் போலை வாகனங்களும் கூட. அதே மாதிரி வான் எண்டாலும் சரி, மோட்டார் சைக்கிள் எண்டாலும் சரி, எல்லாம் எந்தளவுக்கு வேகத்தைக் கூட்டி ஓடேலுமோ, அந்தளவுக்குக் கூட்டித்தான் ஓடுகினம். விபத்து ஏற்படும் எண்டோ, மற்றவைக்கு இடைஞ்சல் எண்டோ யோசிக்கிறயில்லை.

தங்கடை அவசரம் தீர்ந்தா காணும் எண்டு நினைக்கிறவை தானே எங்கடை ஆக்கள். எல்லாத்திலும் சுயநலம் போலை இதிலையும் சுயநலம் தான்.

✻ ✻ ✻

என்ன நாவற்குழியாலை போறது வீண் கரைச்சல், தொலை எண்டு சாவகச்சேரிக்கும் அதுக்கு அப்பாலும் போறவை எல்லாம் கோப்பாய் பாலத்தடியாலை போய் வந்தினம்.

அதிலையும் மண் விழுந்து போச்சு. நாவற்குழியாலை தான் போக வேணும் எண்டு கட்டளை போடுமாப் போலை கோப்பாய் பாலத்தைக் குண்டு போட்டு உடைச்சுப் போட்டினமாம்.

உந்த சிற்றிபி பஸ்ஸுகளும் கோப்பாயாலை தான் போய் வந்திதுகள். அப்பிடிப் போகாமல் நாவற்குழியாலை போகச் சொல்லி சில நாட்களுக்கு முன்னுக்கு பஸ்காரருக்கு ரெலிபோன் உத்தரவு ஒண்டு வந்ததாம். சாரதிமார், கொண்டக்டர்மார் போகப் பயப்படுகினம் எண்டு சொல்லி ஒரு மாதிரிச் சமாளிச்சுப் போட்டினம்.

அந்தச் சமாளிப்புத் திருப்தியாய் இல்லாததாலை தான் பாலம் உடைஞ்சுதோ எண்டு சில பேருக்கு ஒரு ஐமிச்சம்.

என்னவாய் இருந்தாலும் உடைஞ்ச பாலம் உடைஞ்சது தான்.

இன்னொருவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்நாளில் நிகழ்ந்திடும் சகல
மங்கல நிகழ்வுகளை காலமெல்லாம்
பார்த்து மகிழ்ந்திட தத்ரூபமாக
ஒளிப்பதிவு செய்துகொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

உதயன்

03. 03. 1986

புதிய, பழைய T.V. கசெட்,
T.V. றெக்கோடிங்
கலர் / வெள்ளை பிலிம் படச் சுருள்கள்

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# உண்மையை பூசி மெழுக இலங்கை முயற்சிக்கிறது

## இலங்கையின் ஆட்சேபக் கடிதம் குறித்து இந்து நாளிதழில் ரெட்டி

புதுடில்லி, மார்ச்.2

"உண்மையைப் பூசி மெழுக இலங்கை முயற்சிக்கிறது."

இந்திய நாடாளுமன்றத்தில் வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத் பேசிய பேச்சுக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்து இந்தியாவுக்கு ஆட்சேபக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது அல்லவா!

அது குறித்து 'இந்து' நாளிதழ் தனது மார்ச் 2 இதழில் பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே ரெட்டி எழுதிய செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் திரு. ரெட்டி கூறி இருப்பதாவது:-

சந்தேகத்தின் அனுகூலத்தை புதுடில்லி இன்னும் ஜெயவர்த்தனா அரசுக்கு வழங்கி வருகிறது.

அந்த நேரத்தில் மிகவும் ஆட்சேபகரமான, அளவுக்கு மீறிய தொனியில் இலங்கையின் கண்டனக் கடிதம் அமைந்து இருந்தது இந்திய அரசு வட்டாரங்களுக்கு பெரிய ஆச்சரியத்தைத்தான் கொடுத்துள்ளது.

இதற்கு முறையான திருத்தங்கள், புதிய உறுதிமொழிகள் கிடைக்காத பட்சத்தில் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ்பண்டாரி இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வது பெரும்பாலும் சாத்தியமான காரியம் அல்ல என்பது இப்பொழுது வெளிப்படை.

இந்திய நாடாளுமன்றத்தில் வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத் பேசிய பேச்சுக்கும், பிரதமர் காந்தி பேசிய தொனிக்கும் இடையில் வித்தியாசம் ஒன்றைக் காட்ட இலங்கை அரசு முயற்சிக்கிறது.

தனக்குத்தானே கூறிக்கொள்ளும் நியாயத்தை வைத்துக்கொண்டு உண்மையைப் பூசி மெழுக இலங்கை அரசு முயற்சிக்கிறது.

இலங்கையில் நடைபெறும் பயங்கரச் சம்பவங்கள் குறித்து தமிழ் நாட்டில் இருந்து மட்டும் அல்ல இந்தியா முழுவதிலும் உள்ள பிரதிநிதிகள் எழுப்பிய முறைப்பாடுகளுக்கே அமைச்சர் பகத் கவலை தெரிவித்துப் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் இலங்கைப் பிரச்சினை குறித்து பிரதமர் காந்தி மேலோட்டமாகத்தான் பேசினார்.

பிரதமர் இப்படிப் பேசியிருந்தாலும், பிரதமரின் முன் அங்கீகாரம் பெற்றே அமைச்சர் பகத் நாடாளுமன்றத்தில் பேசியிருந்தார்.

பிரதமரின் அனுமதி இல்லாமல் அமைச்சர் பகத் இலங்கையைக் கண்டித்து அப்படிப் பேசியிருக்க முடியாது.

இலங்கையிடம் இருந்து எழுத்துமூலமான புதிய உறுதிமொழிகள் எதுவும் இந்தியாவுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

இலங்கை புதிய யோசனைகள் அனுப்பியுள்ளது என்ற பிரதமர் காந்தியின் நாடாளுமன்றப் பேச்சு, பிரதமர் இதுவிடயத்தில் தவறு ஒன்றை விட்டுவிட்டார் என்பதைப் புலப்படுத்துகிறது.

இலங்கை அரசு வாய்மூலமாகக் கூறி விளக்கப்படுத்தியது சம்பந்தமான வெளிநாட்டு அமைச்சின் உள் அலுவலகக் குறிப்பு ஒன்றைத் தவறாக பிரதமர் காந்தி பயன்படுத்தி விட்டார்.

இலங்கை அரசு புதிய செயல் திட்ட யோசனையைச் சமர்ப்பித்ததாக அந்தக் குறிப்பை வைத்தே பிரதமர் பேசி விட்டார்.

இப்படி திரு. ரெட்டி தனது செய்திக் கட்டுரையில் கூறியிருக்கிறார்.

## விளையாட்டரங்கு

### கொக்குவில் இந்துவுடன் மோதல்

## யாழ் மத்திய கல்லூரி வெற்றி தொடர்கிறது

யாழ்ப்பாணம், மார்ச்.3

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த சிநேகபூர்வ ஆட்டத்தில் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

மத்திய கல்லூரி அணி 41 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். விஜயநாதன் 58 ஓட்டங்களையும், ஆர். ராஜ்குமார் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ். கிருபானந்தன் 28 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் எல். லோகன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வி. மதிதரன் 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதற்குப் பதிலளித்து ஆடிய கொக்குவில் இந்து அணி 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

வி. விமல்ராஜ் 38 ஓட்டங்களையும் எஸ். கிருபானந்தன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏ சிவச்சந்திரன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எஸ். விஜயநாதன், பி. முரளிதரன், ஜி. ரெரிமகான் ஆகியோர் முறையே 28, 30, 9 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மத்திய கல்லூரி அணி கலந்து கொண்ட மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பாடும் மீன் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 3

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை 1க்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

யாழ் உதைபந்தாட்ட லீக் நடத்தும் தலைவர் சுற்றுக்கிண்ணத்துக்கான 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக் அவுட் போட்டியின் ஓர் அங்கமாக மேற்படி போட்டி நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் கோல் போடும் சந்தர்ப்பங்கள் பலவற்றை தவறவிட்டன.

பாடும் மீன் அணிக்கான ஒரு கோலை வி. அரியராஜா போட்டார்.

கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

இந்த நொக்கவுட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் புனித வளன் விளையாட்டுக் கழக அணியை யாழ்ப்பாணம் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி 1க்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது

இந்த ஆட்டத்திற்கு மத்தியஸ்தராக கட்டன்டி ஏ. எம் குணசிங்கம் கடமையாற்றினர்.

## யாழ். பல்கலைக்கழகம் வெற்றி
## விளாசினர் விஜயகுமார்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் பல்கலைக் கழக அணி, யாழ்ப்பாணம் 'ஜொலி ஸ்ரார்ஸ்' விளையாட்டுக் கழக அணியை 32 ஓட்டங்களால் வென்றது.

நேற்று நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்திலேயே பல்கலைக் கழக அணி வெற்றி பெற்றது.

இந்த சிநேகபூர்வ ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 42.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

எம். சி. சேரமான், ஆர். மகிந்தா, எஸ் எல். பி. மெலனியஸ் ஆகியோர் முறையே 34, 47, 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

வை. ஜெயந்தன் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எஸ். பி. எஸ். இளங்கோ, பி. பிரபானந்தன் ஆகியோர் முறையே 37, 38 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய ஜொலி ஸ்ரார்ஸ் அணி 26.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்த 26.2 ஓவர்களில் அபாரமாக ஆடிய ஜொலி ஸ்ரார்ஸ் அணி 138 ஓட்டங்களைப் பெற்றது.

ஆர். விஜயகுமார் 5 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் அடங்கிய 46 ஓட்டங்களையும் எஸ். ராமகிருஷ்ணன் பி கௌரிசங்கர், வை. ஜெயந்தன் ஆகியோர் முறையே 15, 16, 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே ஸ்ரீரங்கன் 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஆர். மகிந்தா 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எஸ். எல் பி. மெலனியஸ் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## இலங்கை தோல்வி

கண்டி மார்ச் 3

நேற்று நடைபெற்ற ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இலங்கை அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 23 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது

கீர்த்தி ரணசிங்க 41 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 22 ஆவது ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 125 ஓட்டங்களைப் பெற்றது.

வோஸிம்கான் 55 ஓட்டங்களைப் பெற்றார்.

## ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப்பிரசுரம்

பலாலி, மார்ச் 3

பலாலி, சுந்தரபுரப் பகுதியில் ஹெலிக்கொப்டரில் இருந்து ஆயுதப்படையினரால் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

பலாலி விமான நிலையத்துக்கு அருகில் இருந்த 75க்கு மேற்பட்ட குடும்பத்தினர் அண்மையில் அவ்விடத்தை விட்டு வெளியேறி அமைத்த புதிய குடியேற்றம் தான் சுந்தரபுரம் ஆகும்.

சுந்தரபுரத்துக்கு மேலால் கடந்த சனிக்கிழமை பறந்த ஹெலிக்கொப்டர் ஒன்று துண்டுப் பிரசுரங்களை வீசியது.

"சமாதானத்தை விரும்பும் மக்களுக்கான விசேட அறிவித்தல்" என்ற தலைப்பில் இத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

துண்டுப் பிரசுரத்தை மாவட்ட இணைப்பு அதிகாரி வெளியிட்டுள்ளார்.

உங்கள் குடும்பத்தினதும், உடைமைகளினதும் வாழ்க்கையினதும் பாதுகாப்பு நலனை முன்னிட்டே இவ்வறிவித்தல் செய்யப்படுகின்றது என்று தொடரும் அந்த நீண்ட அறிவித்தல்-

"பயங்கரவாதி"களுக்குப் புகலிடம் வழங்குவதோ, அவர்களுக்கு உணவு, உடை வழங்குவதோ, அவர்களின் ஆயுதங்களை, கொள்ளைப் பொருள்களை பதுக்கி வைக்க இடமளிப்பதோ அனைத்தும் தண்டனைக்குரிய குற்றமென்பதை மக்கள் மனதில் வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பாதுகாப்புப் படையினருக்கும் ஏற்படும்.

தத்தமது பாதுகாப்பை முன்னிட்டு நாம் பொது மக்களை வேண்டுகிறோம். எந்த விதத்திலும் "பயங்கரவாதி"களுக்கு ஆதரவு வழங்காதீர்கள். மீறினால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்டோரைக் கைது செய்து வழக்குத் தொடரவேண்டிய நிலை ஏற்படும் என்று முடிகிறது.

## பத்திரிகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருமகனான தங்கவேலுவின் சடலம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை,

இராசநாயகத்தின் சடலத்துடன் தோணி நேற்றுக் கரை ஒதுங்கியது.

இரத்தினசிங்கத்தின் சடலம் நேற்றுப் பகல் 12.30 மணியளவில் கரையில் ஒதுங்கியிருந்தது. இரத்தினசிங்கத்தின் நெற்றியில் சூட்டுக் காயம் காணப்பட்டது.

மற்ற மூன்று பேரின் சடலங்கள் இன்னும் அகப்படவில்லை. வேறு ஊர்களில் இருந்து வயல் அறுவடைக்காக வவுணதீவுக்கு அவர்கள் வந்து இருந்தனர் என்று தெரிகிறது.

மழை காரணமாக அறுவடை இடம் பெறாததால் அனைவரும் வாவியில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தபோதே சுடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சூட்டுச் சம்பவம் பற்றிய செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இச்சம்பவம் பற்றி நேரில் விசாரிக்க வவுணதீவுக் கிராமத்துக்கு இன்று (திங்கள்) மட்டக்களப்பு பிரஜைகள் குழு விஜயம் செய்கிறது.

நேற்று நடந்த குழுவின் வாராந்தக் கூட்டத்தில் வவுணதீவுச் சம்பவம் பற்றி ஆராயப்பட்டது.

## கைக்கடிகாரம் எவருடையது ?

யாழ்ப்பாணம், மார்ச் 3

கோண்டாவில் இ.போ.ச டிப்போவிலிருந்து யாழ். பஸ் நிலையத்தை அடைந்த தலைமன்னார் பஸ்ஸில் இருந்து ஒரு கைக்கடிகாரம் கண்டு எடுக்கப்பட்டது.

உரிமையாளர் தக்க அடையாளம் காட்டி க. குலசேகரன், (அமுதசுரபி) உரும்பராய் சந்தி, உரும்பராய் என்ற விலாசத்தில் தொடர்பு கொண்டு பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

[illegible] ஆசிரியர் திரு எஸ். [illegible] கண்டு எடுத்தார்.

## தலவாக்கலை வேலை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 3

தலவாக்கலைப் பகுதியில் [illegible] கோட்டத்தில் முகாமிட்டுள்ள ஆயுதப் படையினரை அகற்றும்படி

## வவுனியாவில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவர்களின் சடலங்கள் விசேட விமான மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டன.

இச்சம்பவத்தை அறிந்து வவுனியா நகரில் பதற்றம் நிலவியது கடைகள் பலவும் மூடப்பட்டதோடு, வாகனப் போக்குவரத்தும் குறைந்திருந்தது.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் மொத்தம் 10பேர் சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானார்கள். 15க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப்படை சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

இறந்தவர்களும் படுகாயம் அடைந்தவர்களும் ஹெலிக்கொப்டர் ஒன்றில் ஐந்து தடவைகள் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தில் 3 இராணுவத்தினரும் 2 பொதுமக்களும் மரணமானதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன மற்றும் பலர் காயமுற்றதாகவும் அமைச்சு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## அகதிகளுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதி முகாமுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா வகைகள் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இளைஞர் சமூகசேவை கழகம், உள்ளூர் வர்த்தகர்களிடம் பால்மா வகைகளைச் சேகரித்திருந்தது.

கழகத் தலைவர் நீக்கலாப்பிள்ளை நீல் அகிலக்குமாரன் பால் மா வகைகளை நேற்று அகதிமுகாம் பொறுப்பதிகாரி டாக்டர் ப. சசிதரனிடம் கையளித்தார்.

கோரி சுமார் 1,000 தோட்டத் தொழிலாளர் நேற்று வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

## விமானத்தில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சம் ரூபா என்று சுங்கத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது.

இதே நேரத்தில் சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்கா வந்த எயர் லங்கா விமானத்தில் பிரயாணம் செய்த இலங்கை பெண் ஒருத்தியும் தங்கக் கடத்தல் சம்பந்தமாகச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இப்பெண்ணின் உடலின் மறைவிடத்தில் இருந்து தங்கம் கைப்பற்றப்பட்டது. தங்கத்தின் பெறுமதி 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது.

## கோப்பாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்டர் ஒன்று பறந்து வந்து தாமபோதிப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

தாம்போதி இளைஞர்களால் மீண்டும் திருத்தப்படுவதை தடுப்பதே ஹெலிக்கொப்டர் தாக்குதலின் நோக்கம் என்று நம்பப்படுகிறது.

ஹெலிக்கொப்டர் தாக்குதலின் போது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இவர்களது மோட்டார் சைக்கிள் சேதம் அடைந்தது.

குண்டு வெடிப்பின் போது தாம்போதியில் 15 அடி நீளப் பகுதி சேதம் அடைந்து நீரில் மூழ்கியது.

எனினும் ஓரத்தால் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மட்டுமே செல்லக்கூடியதாக உள்ளது.

கார், மினிபஸ், பஸ் போன்ற வாசனங்கள் நேற்று இப்பாதையால் செல்ல முடியவில்லை

கோப்பாய் – கைதடி தாம்போதி தகர்க்கப்பட்டது இது மூன்றாவது தடவையாகும்.

கோப்பாய் – கைதடி தாம்போதியைப் பயன்படுத்திய வாகனங்கள் நேற்று புத்தூர் – சாவகச்சேரி பாதையை பயன்படுத்தின.

தாம்போதிப் பகுதியில் நேற்றுக் காலை நடைபெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயம் அடைந்த இருவர் யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

பத்மநாதன் பாலச்சந்திரன், கைதடி (32 வயது) இவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது.

அல்பேட் அருள்குமார் கைதடி (26 வயது) காலில் காயம் ஏற்பட்டது.

## 5 மீனவர்கள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

தமது கணவர்மாரை விடுவிக்குமாறு இவர்களின் மனைவிமார் தேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் விண்ணப்பித்திருந்தனர்.

வல்வெட்டித்துறை வாசிகளான சாம்பசிவம் தங்கவேலாயுதம், முருகுப்பிள்ளை வேலும்மயிலும், இராசகோபால் இராசகுமார், தங்கவேலாயுதம் அருந்தவச் செல்வம், தொண்டமானாறு வாசியான தில்லைக் கனகசபை கணேசமூர்த்தி ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

## பேராசிரியர் ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யில் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு அரிய சேவை செய்தவர் பேராசிரியர் சின்னத்தம்பி.

தமிழ் பல்கலைக்கழக இயக்கத்திலும் அவர் முக்கிய பங்கெடுத்தவர்.

யாழ் பல்கலைக்கழகம் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவில், கலாநிதிப் பட்டம் வழங்கி அவரை கௌரவித்தது

இறுதிச் சடங்குகள் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி இல்லத்தில் இன்று திங்கள் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

## மறியல்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நகரத்திலிருந்து மந்திகைக்கு மாற்றப்பட்டுள்ள இலங்கை வங்கிக் கிளையில் வழமையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை முதல் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை செயல்படுவதை அடுத்தே இம் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

## பாராட்டு விழா

நாகர்கோவில், மார்ச் 3

பருத்தித்துறைப் பகுதியில் பல வருட காலமாக சமூகசேவையில் ஈடுபட்ட திரு க. நடனசபாபதியின் அரை நூற்றாண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் இன்று திங்கள் மாலை பாராட்டு விழா நடைபெறும்.

வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

## வெளியில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து நோக்குவது ஒரு வகை அனுபவம்.

யாழ்ப்பாண வாழ்க்கையை பிறநாடுகளில் இருந்து ஒரு பாத்திரம் நோக்குவது வேறுவகை அனுபவம்.

இப்புதிய பரிமாணத்தைப் பேரன் தொட்டுப் பார்த்திருக்கிறார் என்று கலாநிதி சுப்பிரமணியன் தொடர்ந்து கூறினார்.

நாவலாசிரியர் நெல்லை க. பேரன் தனது பதிலுரையில் எனது நாவலில் வரும் கதாபாத்திரங்கள், இடம்பெறும் சம்பவங்கள் நிஜமானவை. பெயர்கள் மட்டும் வித்தியாசமானவை.

இம்முயற்சி கருக்கொண்டிருந்த வேளையில் போட்டிக்கு எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதனால் அவசரத்தில் எழுதியமையாலும், குறுநாவலாக எழுத வேண்டிய போட்டி விதிகள் காரணமாகவும் இதனை முழு நாவலாக எழுத முடியவில்லை.

இப்படி அவர் கூறினார்.

விமர்சனத்தை ஏற்கும் மனப்பாங்கும் துணிச்சலும் உள்ளவன் நான். இங்கு கூறப்பட்ட ஆரோக்கியமான விமர்சனத்துக்கு மதிப்பளிக்கின்றேன். அடுத்த படைப்புக்களின் போது அவற்றை கருத்திற் கொள்வேன்.

தமிழ் மன்றச் செயலாளர் செல்வன் செ. சக்திதரன் நன்றி கூறினார்.

## களுவாஞ்சிக்குடி: 16 தமிழர் விடுதலை

மட்டக்களப்பு, மார்ச் 3

களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 தமிழர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கல்லடி ஆயுதப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டவரில் இரண்டு பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 03-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ 60/N/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org